**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts05sp052026.01
https://ngmtamil.in/

# Humanistic thoughts in Thirukkural

**Dr. K. Veerathamilan*,**
Assistant Professor in Tamil, Department of Science and Humanities, Sri Muthukumaran Institute of Technology, Chennai-69
*Correspondence: veerathamilan02vdm@gmail.com, Tel: +917639263360.

**Article Info**
Received on 15-May-2026, Revised on 18-May 2026, Accepted on 20-May-2026, Published on 27-May-2026

## ABSTRACT

Humanism means treating fellow human beings as one's own self and showing them love, compassion, and respect. It is considered the fundamental principle of human life, transcending all boundaries of race, religion, language, and nation. When observing and researching the antiquity of the Tamil language and the Tamil race, it is evident that Tamil literature has consistently emphasized through the ages that living in unity by casting aside differences is the ideal path. Therefore, it can be said that Tamil literatures serve as the very fountainhead of humanism. The Tirukkural, which holds an unparalleled place in the Tamil literary tradition, expounds universal life principles for all of humanity, transcending differences of religion, language, caste, and race. Noble qualities such as individual virtue, social responsibility, altruism, compassion, and charity are explained in this book as the foundation of humanism. The entire essence of the Tirukkural is rooted in humanistic thought. Consequently, this article aims to analyze the humanistic ideas emphasized by Thiruvalluvar with the goal of elevating the human psyche and social life.

**Keywords**; *Thirukkural, Manithaneyam, Anbu, Arul, Eegai, Pasi, Kollamai.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# திருக்குறளில் மனிதநேயச் சிந்தனைகள்

***முனைவர் க.வீரத்தமிழன்,** உதவிப்பேராசிரியர் – தமிழ், அறிவியல் மற்றும் மனிதவியல் துறை,
ஸ்ரீ முத்துக்குமரன் தொழில்நுட்பக்கல்லூரி, சென்னை-69. கைபேசி – 7639263360

**முன்னுரை**

மனிதநேயம் என்பது சக மனிதர்களைத் தன்னைப் போலவே கருதி, அவர்களிடம் அன்பும், கருணையும், மரியாதையும் காட்டுவதாகும். இது இனம், மதம், மொழி, நாடு என அனைத்து எல்லைகளையும் கடந்த மனித வாழ்க்கையின் அடிப்படை நெறியாக கருதப்படுகிறது. தமிழின் தொன்மையையும், தமிழினத்தின் தொன்மையையும் உற்று நோக்கி ஆய்வு செய்கின்றபோது, வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையுணர்வுடன் ஒன்றுபட்டு வாழ்தலே தக்கது எனும் கருத்திலேயே தமிழிலக்கியம் காலந்தோறும் உணர்த்தி வந்திருக்கிறது. ஆகவே, மனித நேயத்தின் ஊற்றுக் கண்ணாகவே தமிழிலக்கியங்கள் விளங்குகிறது எனலாம். தமிழ் இலக்கிய மரபில் ஒப்பற்ற இடத்தைப் பெற்றுள்ள திருக்குறள், மதம், மொழி, சாதி, இன வேறுபாடுகளைத் தாண்டி மனிதகுலம் முழுவதற்குமான பொதுவான வாழ்க்கை நெறிகளை எடுத்துரைக்கிறது. தனிநபரின் நல்லொழுக்கம், சமூகப் பொறுப்பு, பிறர்நலம் கருதல், கருணை, ஈகை போன்ற உயர்ந்த பண்புகள் மனிதநேயத்தின் அடித்தளமாக இந்நூலில் விளக்கப்படுகின்றன. திருக்குறளின் முழு உட்பொருளும் மனிதநேயச் சிந்தனையையே அடிப்படையாகக் கொண்டதாகும். எனவே, மனிதனின் மனநிலையையும் சமூக வாழ்வையும் உயர்த்தும் நோக்கில், திருவள்ளுவர் வலியுறுத்திய மனிதநேயச் சிந்தனைகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**மனிதநேயம்**

பண்டைக்காலம் தொட்டு 19-ஆம் நூற்றாண்டு வரை மனிதநேயம் என்ற சொல் அறத்தையும் ஈவு இரக்கம் காட்டுவதையும் பிற உயிர்களுக்கு துன்பம் செய்யாமையையும் ஒரு கன்னத்தில் அறைபவனுக்கு மறுகன்னத்தைக் காட்டுகின்ற எண்ணம் உடையதையும் பொருளாகக் கொண்டு மதிக்கப்பட்டு வருகின்றது. மனிதாபிமானம், மானிடப் பற்று, அறம், பொருள், சமதர்மம், சமரசம், “யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” எனப்பலவாறு மனித குல சமுதாயம் வாழத் துணை புரிகின்ற ஒவ்வொரு உணர்ச்சியையும் மனிதாபிமானம் என்றே கருதினர்.

**மனிதநேயம் - சொற்பொருள் விளக்கம்**

மனிதநேயம் என்ற சொல் மனிதர்களிடையே காணப்படும் நேயத்தைச் சுட்டும். நேயம் என்ற சொல் நேசம் என்றும் வழங்கப்படுகின்றது. நேயம், நேசம் என்ற சொற்களுக்கு **“அன்பு”**[1] என்றும், அதற்கு இணையான ஆங்கிலச் சொற்களாக **“Love, affection, piety”**[1] என்றும் தமிழ்ப் பேரகராதி பொருள் தருகின்றது.

அன்பு என்பதனை, **“தொடர்புடையார் மாட்டு உண்டாகும் பற்று, நேசம், கருணை”**[2] எனத் தமிழ்ப் பேரகராதியும், **“ஒருவரின் மனம் நெகிழும்படியாக மற்றொருவர் அவர்மேல்**

**வெளிப்படுத்தும் நேசமும் நட்பும் கலந்த உணர்வு”**[3] என க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியும் பொருளுரைக்கிறது.

**“மனிதநேயம் என்பது மனிதருக்கு மனிதர் இருக்க வேண்டிய தொடர்புறவு பற்றிய ஒருவிதமான மனநிலை; அந்த மனநிலையினால் தூண்டப்பட்டு நடைபெறும் செயல்நிலை”**[4] என்று சாலினி இளந்திரையன் விளக்கம் அளிக்கின்றார்.

**அன்பே மனிதநேயத்தின் அடித்தளம்**

**“அரிது அரிது மானிடராதல் அரிது”**[5] என்பார் ஔவையார். பெறற்கரிய பிறவியில் நாம் செயற்கரிய நல்ல பல செயல்களைச் செய்தல் வேண்டும். அதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது மனிதநேயமே ஆகும். தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் அன்புள்ளங்களில் சுரப்பதுதான் மனிதநேயம்.

**“அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு”**[6]

என்பது வள்ளுவர் வாக்கு. இவ்வுலகில் வாழும் உயிர்களெல்லாம் அன்பை அடிப்படையாகக் கொண்டு வாழ்கின்றன. அன்பு இல்லை எனில் இவ்வாழ்க்கை வறண்ட பாலைநிலமாகிவிடும். அன்பின் முதிர்ந்த நிலைதான் அருள் என்றும் நேயம் என்றும் அழைக்கப்படுகின்றது. மனிதநேயம் என்பது மனிதன் மற்ற உயிர்களிடத்தும், சகமனிதரிடமும் கொண்டிருக்கும் பேரன்பைக் குறிக்கும்.

திருவள்ளுவர் மனித வாழ்வின் மூலாதாரமாக அன்பைச் சுட்டிக்காட்டுகிறார்.

**“அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு”**[7]

அன்பில்லாதவர் சுயநலத்தில் வாழ்வார்; அன்புடையவர் பிறரையும் தம்மைப் போல் கருதுவார். இக்குறள் அன்பு மனிதனைத் தன்னலமற்ற வாழ்விற்கு வழிநடத்துகிறது என்பதை வெளிப்படுத்துகிறது. இது மனிதநேயத்தின் மையக் கருத்தாகும்.

அதீத அன்பின் வழி உறவு கொள்ளுதலே நட்பாகிறது. திருவள்ளுவர் நட்புக்கு ஓர் அதிகாரமே வகுத்துள்ளார். ஒருவருடன் முகம் மட்டும் மலரும் வகையில் நட்பு கொள்வது நட்பன்று, அன்பால் மனமும் மலர நட்புக்கொள்வதே நட்பாகும் என்றும், ஆடை அவிழ்ந்தவன்கை அதைப்பிடிப்பதற்கு விரைந்து செல்வது போலத் துன்பம்நேர்ந்த போது விரைந்து சென்று அதனை நீக்குபவனே நண்பனாவான் என்றும், நட்பிற்கு உயர்ந்த இடம் எக்காலத்தும் மாறுபாடின்றி முடிந்தவரையில் நண்பனைத்தளராமல் தாங்கும் தன்மையாகும் என்று இலக்கணம் வகுத்துள்ளார். இதனை,

**“முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு”**[8]

**“உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**

**இடுக்கண் களைவதாம் நட்பு"[9]**

**"நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பின்றி**
**ஒல்லும்வாய் ஊன்றும் நிலை"[10]**

என்ற வள்ளுவரின் குறள்கள் அன்பு மலர்தலையும், நட்பின் ஆழத்தையும் புலப்படுத்துகிறது.

**ஈகை – மனிதநேயத்தின் செயல்பாட்டு வடிவம்**

**"செல்வத்துப் பயனே ஈதல்"[11]**

என்கிறது புறநானூறு. மனிதநேயத்தின் உண்மையான வெளிப்பாடு பிறரின் தேவையை உணர்ந்து உதவுவதில் உள்ளது. ஈகை என்பது தன்னிடம் உள்ள பொருளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதையே குறிக்கிறது. செல்வத்தை சேர்த்து வைத்திருப்பதற்குப் பதிலாக, தேவையுடையோருக்கு வழங்குவது உயர்ந்த மனிதநேயச் செயலாகும் என்பதை திருவள்ளுவர்,

**"நச்சப் படாதவன செல்வம் நடுவூருள்**
**நச்சு மரம்பழுத் தற்று"[12]**

என்ற திருக்குறளில் செல்வத்தின் பயனை நல்லறமாகிய ஈதலைச் செய்யாதவர்கள் அறியார். வட்டி வாங்கும் பாதகர்கள் செல்வத்துப் பயனை அறிய மாட்டார்கள். ஊருள் எட்டி மரம் பழுத்தால் யார்க்கும் பயன்படுவதில்லை. நச்சு மரம் நடுவூருள் பழுத்தால் யார்க்கும் பயன்படாதது போல, உலோபிகள் (கஞ்சன், பிறருக்கு ஈயாதான்) செல்வம் யார்க்கும் பயன்படாது எனத் தெளிவுபடுத்துகிறார்.

ஒருவர் மற்றொருவரிடம் கேட்டுப் பெறுவது தானமாகும். வள்ளுவர் இதனை,

**"இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்**
**குலனுடையான் கண்ணே உள"[13]**

என்ற குறளில், இல்லை என்று இரந்து வந்தவர்க்கு இல்லை என்று சொல்லாமல் கொடுத்தலே உயர்குடிப் பிறந்தவரிடத்து உள்ள குணமாகும் என்று ஈகைப் பண்பாகிய தானத்தின் சிறப்பைக் குறித்துள்ளார்.

மனித நேயமுள்ளளவன் தீவினையின்றி நல்லுழைப்பால் ஈட்டிய செல்வம் பெருந்தகையாளன் வழியே பிறருக்கும் பயன்படுகையில் உலகிற்கு பயன் மிகுதி. இது மருத்துவப் பயன் தரும் மருந்து மரம் போல பயன்படுவான். இதனை,

**"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின்"[14]**

எனக்கூறிக் காட்டுவர் வள்ளுவர். மேலும் ஈகைப் பண்பைக் குறிப்பிடுகையில்,

**"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு"[15]**

**“அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி”[16]**

**“ஈத்துவக்கும் இன்பம்அறியார் கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்”[17]**

இது போன்ற குறள்களில் மற்றவர்க்குக் கொடுத்து வாழ்வதே புகழ்பட வாழ்தல் என்றும் வறுமை என்று வருபவர்க்கு ஈன்ற பொருளைத் தந்து வாழ்தலே நல்ல பண்பாகும் என்றும், மனித நேயப்பண்பையும், நல்லறமாகிய ஈதல் பண்பையும் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒருவன் செய்யும் உதவியின் அகலத்தை, குறிப்பிடுவதோடு, உதவிசெய்வதற்கு பரந்த ஆழத்தையும் மனப்பான்மையையும், மனிதநேயத்தையும் பெற்றிருக்க வேண்டும் என்பதை,

**“செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது”[18]**

என்று குறிப்பிட்டுள்ளார் வள்ளுவர்.

மேலும், ஈகை என்பது புகழுக்காக அல்லது எதிர்பார்ப்புக்காக செய்யப்படக் கூடாது. தன்னலமற்ற மனத்துடன், தகுதியுடையோரின் துன்பத்தை நீக்கும் நோக்கில் செய்யப்படும் உதவியே உயர்ந்த மனிதநேயமாகும் என்பது இக்குறள்களின்வழி பெறப்படுகிற சிந்தனையாகும்.

**பசியை மாற்றும் மனிதநேயம்**

பசியைப் பிணி என்று கூறுவாரும் உண்டு. **“பசிப்பிணி என்னும் பாவி”[19]** என்று பசியின் கொடுமையை மணிமேகலைக் காப்பியம் சித்தரிக்கிறது. ஒரு சாண் வயிற்றுக்காகத்தான் இவ்வுலகில் உள்ளவர் அனைவரும் உழைக்கின்றனர். பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் என்பது ஒரு முதுமொழி. பசித்தவர்க்கு **“உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்”[20]** என்பது புறநானூற்றுப் பாடல். இவர் நமக்கு வேண்டியவர், வேண்டாதவர் என்ற விருப்பு வெறுப்பினை நீக்கி, உயர்வு, தாழ்வு, செல்வம், வறுமை, இளமை, முதுமை என வேறுபாடுகளைக் கருதாமல் உணவினை வழங்கிடுதல் மனிதநேயம் படைத்தோர் செயலாகும். பசியைத் துறந்தார்தம் ஆற்றலை விட வலிமை மிக்கது ஒருவர் தம் பசியை மாற்றுவார் தம் வலிமை என்பதை,

**“ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்”[21]**

என்ற குறட்பாவில் வெளிப்படுத்தியள்ளார்.

**அருளுடைமை - மனிதநேயத்தின் உயர்ந்த பண்பு**

எந்த ஒரு காரணமும் இன்றி யார் மாட்டும் வேண்டுதல், வேண்டாமையின்றிப் பிறப்பது அருளாகும். அன்பின் முதிர்நிலை அருளாகும். அதன்பொருள் நேயமாகும். அருட்செல்வமே செல்வத்துள் செல்வமாகும். மற்றச் செல்வங்களெல்லாம் இழிந்தவரிடத்திலும் உள்ளன.

இறைவனை அடையும் வழிகளைக் கூறும் மதங்கள் பலவாக உள்ளன. ஒரு மதம் கூறியதை மற்றொரு மதம் மறுக்கும் அல்லது ஏற்கும். ஆயின் அனைத்து மதங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சில கருத்துகள் ஒவ்வொரு மதத்திலும் உள்ளன. அவற்றுள் ஒன்றுதான் அருளுடைமையாகிய மனிதநேயம். 'உன் உயிரைப் போல, பிற உயிரையும் நேசி' என்ற மனிதநேயக் கருத்தை அனைத்துச் சமயங்களும் கூறுகின்றன. இதனையே,

**"நல்லாற்றால் நாடி அருளாள்க பல்லாற்றால்**
**தேரினும் அஃதே துணை"[22]**

என்கிறார் வள்ளுவர். "எல்லாச் சமயத்தாரானும் உறுதியாக விரும்பப்படுவது அருளாதலால் உயிர்க்குறுதி வேண்டினோர் அருளுடையராக வென்பது கருத்து" என இராமானுஜகவிராயர் விளக்கம் தருகிறார். சமயங்கள் பல இருந்த காலத்திலும் வள்ளுவர் அருளை மனத்தில் கொண்டு வாழுங்கள் என்று கூறியிருக்கிறார். இன்றும் சமயங்கள் பல இருப்பினும் மனிதநேயத்தோடு வாழுங்கள் என்பதே முதன்மையாகக் கூறப்பட்டு வருகிறது. எனவே மதவழியாக நடப்பினும் மனிதாபிமானத்தோடு நடப்பதே சாலச் சிறந்தது.

மற்ற உயிர்களின் துன்பத்தை உணர்ந்து உதவுவது மனிதநேயத்தின் உயர்ந்த நிலையாகும்.

**"அருளல்லது யாதெனில் கொல்லாமை; கோறல்**
**பொருளல்லது அவ்வுலகம் இல்"[23]**

இங்கு, பிற உயிர்களுக்கு தீங்கு செய்யாதிருப்பது மனிதநேயத்தின் அடிப்படை நெறியாகக் கூறப்படுகிறது.

**சமத்துவக் கொள்கை**

மனிதனை உயர்வு–தாழ்வு பாராமல் மதிக்க வேண்டும் என்ற சிந்தனையைப்

**"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்"[24]**

என்று எல்லா மனிதர்களும் பிறப்பால் சமம்; அவர்களின் செயல்களாலேயே வேறுபாடு உருவாகிறது. இது உயர்ந்த மனிதநேயக் கொள்கையை வள்ளுவம் வலியுறுத்துகிறது.

**இன்னா செய்தார்க்கும் இனியன செய்தல்**

தீங்கு செய்பவனுக்கும் நன்மை செய்தலாகிய மனித நேயத்தைக் குறிப்பது, அதாவது, தனக்கு துன்பம் விளைத்தவனுக்கும் அவன் நாணும் படியாக நன்மைகள் செய்வதால் தீமைகளும், தான் செய்த நன்மையால் மறைந்துவிடும் என்பதை,

**"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண**
**நன்னயம் செய்து விடல்"[25]**

என்ற குறளின் மூலம் எடுத்துரைக்கிறார் வள்ளுவர். மேலும்,

**"இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று"[26]**

மனிதநேயம் செயலில் மட்டுமல்ல, சொல்லிலும் வெளிப்பட வேண்டுமென்றும் இனிமையான சொற்கள் மனித உறவுகளை வலுப்படுத்தும் என்றும் கூறுகிறார்.

**விருந்தோம்பல் – மனிதநேயத்தின் வாழ்வியல் வடிவம்**

மனிதன் தனித்து வாழும் உயிரல்ல; சமூகத்துடன் இணைந்து வாழும் ஒருவன். சமூக வாழ்வின் ஒற்றுமையும் நல்லிணக்கமும் நிலைக்க வேண்டுமெனில், பிறரை அன்புடன் வரவேற்று உதவும் மனப்பாங்கு அவசியமாகும். இந்த உயர்ந்த மனிதநேயச் சிந்தனையை திருக்குறள் தெளிவாக எடுத்துரைக்கிறது. இதனையே, வள்ளுவர் விருந்தோம்பலை இல்லற வாழ்க்கையின் முக்கிய கடமையாகக் கருதுகிறார்.

விருந்தோம்பல் என்பது வீட்டிற்கு வரும் விருந்தினரை அன்புடனும் மரியாதையுடனும் ஏற்றுக்கொண்டு அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதாகும். இது வெறும் மரபு அல்லது பழக்கம் அல்ல; மனிதநேயத்தின் வெளிப்பாடாகும். பிறரை மகிழ்ச்சியுடன் வரவேற்கும் மனநிலை, அன்பும் பரிவும் கொண்ட மனிதத் தன்மையை வெளிப்படுத்துகிறது.

**"விருந்து புறந்ததாத் தானுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"[27]**

என்ற குறளும்,

**"வருவிந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுதல் இன்று"[28]**

என்ற குறளும் தமிழ் மக்களின் விருந்தோம்பலைப் பற்றிய கருத்துகளை எடுத்துரைக்கிறது. அதாவது அமிழ்தமேயானாலும் விருந்தினரோடு சேர்ந்து உண்ணுதல் வேண்டும் என்பதையும், அப்படி விருந்தினரை பேணி உபசரிப்பவனின் வாழ்க்கை என்றும் கெடுவதில்லை என்றும் விருந்தோம்பலை வற்புறுத்தியும், தமிழ்மக்களின் தலையாயப் பண்பான விருந்தினரை உபசரிக்கும் மனப்பாங்கையும் எடுத்துக்காட்டியுள்ளார் வள்ளுவர். இதன் மூலம் பிறரின் நலனை முன்னிலைப்படுத்தும் மனப்பாங்கே மனிதநேயத்தின் அடையாளமாகும் எனக் கருதுகிறார் போலும். இத்தகைய பண்புகள் சமூகத்தில் அன்பு, நம்பிக்கை மற்றும் ஒற்றுமையை வளர்க்கின்றன. ஒருவர் பிறருக்காகச் செயல்படும் போது, சமூக உறவுகள் வலுப்பெற்று நல்லிணக்கம் நிலைபெறும்.

**முடிவாக**

திருக்குறள் மனிதனை மையமாகக் கொண்டு, அன்பு, கருணை, ஈகை, சமத்துவம், ஒழுக்கம் ஆகிய பண்புகளின் மூலம் மனிதநேயமான சமூகத்தை உருவாக்கும் வழியைக் காட்டுகிறது. மனிதன் பிறரின் நலனைக் கருதி வாழ வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையை உலகளாவிய மனிதநேயக்

கோட்பாடாக திருக்குறள் நிலைநிறுத்துகிறது. அதனால், திருக்குறள் மனிதநேயத்தின் நித்திய வழிகாட்டி நூலாக இன்றும் திகழ்கிறது.

**அடிக்குறிப்புகள்**

1. தமிழ்ப் பேரகராதி, தொகுதி IV, பகுதி 1, ப.2353
2. தமிழ்ப் பேரகராதி, தொகுதி I, ப.183
3. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.60
4. சாலினி இளந்திரையன், சங்கத் தமிழரின் மனிதநேய மணிநெறிகள், ப.1
5. ஔவையார் தனிப் பாடல் : 57
6. குறள். 80
7. குறள். 72
8. குறள். 786
9. குறள். 788
10. குறள்.789
11. புறம், பா. 10
12. குறள். 1008
13. குறள்.223
14. குறள்.271
15. குறள். 231
16. குறள்.226
17. குறள். 228
18. குறள். 101
19. மணிமேகலை, பாத்திரம் பெற்ற காதை, வரி-80
20. புறம், பா.18
21. குறள். 225
22. குறள். 242
23. குறள். 254
24. குறள். 972
25. குறள். 314
26. குறள். 100
27. குறள். 82
28. குறள். 83

**துணைநின்ற நூல்கள்**

1. தமிழ்ப் பேரகராதி, தொகுதி IV, பகுதி 1.
2. தமிழ்ப் பேரகராதி, தொகுதி I.
3. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, தமிழ்-தமிழ்-ஆங்கிலம், முதற்பதிப்பு, 1992.
4. சாலினி இளந்திரையன், சங்கத் தமிழரின் மனிதநேய மணிநெறிகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, இரண்டாம் பதிப்பு - 2004.
5. மாணிக்கம் புலவர், திருக்குறள் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 108, மறுபதிப்பு – சனவரி 2000.
6. சாமிநாதையர், உ.வே. (ப.ஆ), புறநானூறு மூலமும் உரையும், உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, 1956.
7. சோமசுந்தரனார், பொ.வோ. (உ.ஆ), மணிமேகலை, கழகம், சென்னை, 1975.
8. புலியூர்க்கேசிகன், ஔவையார் தனிப் பாடல்கள்,மங்கை வெளியீடு, சென்னை – 18, முதற்பதிப்பு – டிசம்பர் 2010

## REFERENCES

[1]. Tamil Lexicon, Volume IV, Part 1.
[2]. Tamil Lexicon, Volume I.
[3]. Cre-A's Dictionary of Contemporary Tamil, Tamil-Tamil-English, First Edition, 1992.
[4]. Shalini Ilanthiraiyan, Humanistic Values of Sangam Tamils, International Institute of Tamil Studies, Chennai, Second Edition - 2004.
[5]. Manickam Pulavar, Tirukkural Commentary (Thelivurai), Manivasagar Pathippagam, Chennai – 108, Reprint – January 2000.
[6]. Swaminatha Iyer, U.V. (Editor), Purananuru Text and Commentary, U.V. Swaminatha Iyer Library, Chennai, 1956.
[7]. Somasundaranar, Po. Vo. (Commentator), Manimekalai, Kazhagam, Chennai, 1975.
[8]. Puliyur Kesikan, Individual Poems of Avvaiyar, Mangai Veliyeedu, Chennai – 18, First Edition – December 2010.